நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை–600 005.

ந.க.எண்.66830/2006/ப்பி2 நாள்– 18.01.2008.

**சுற்றறிக்கை**

பொருள்– 12–வது நிதிக்குழு மான்யம் – உள்ளாட்சி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படும் 12–வது நிதிக்குழு மான்யத் தொகையில் 25 சதவீதம் தொகைக்கு மண் சாலைகளை தார் சலை/ சிமெண்ட் சாலையாக மாற்றம் செய்தல் தொடர்பாக அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை–
1. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.66830/06/ப்பி2 நாள்.23.02.07.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.66830/06/ப்பி2 நாள்.29.06.07.
3. ஆய்வுக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்களின் அறிவுரை.

******

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005–06, 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளுக்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின்கீழ் மான்யத் தொகைகள் விடுவிக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. 50% மான்யத் தொகையில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளுதல்.
2. 25% தொகையில் சாலைகள் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.
3. 25% தொகையில் மின்கட்டணங்கள் செலுத்துதல் மற்றும் கணினி பராமரிப்பு பணிகள் ( Data Base) மேற்கொள்ளுதல்

2. ஆய்வுக் கூட்டத்தில் அரசு வழங்கிய அறிவுரைகளின்படி 12வது நிதிக்குழு மான்யத் தொகையில் 25 சதவீதம் மண்சாலைகளை தார்/ சிமெண்ட் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும்படி இதன் மூலம் அறிவுரை வழங்கப்படுகிறது.

3. இச்சுற்றறிக்கையினை பெற்றமைக்கான ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்பிவைக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/— நிரஞ்சன் மார்டி,
**நகராட்சி நிர்வாக ஆணையர்.**

**பெறுநர்**

அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

**நகல்**
**உதவி திட்ட அமைப்பாளர் —**
**சுற்றறிக்கையை இணையதளத்தில் பிரசுரிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.**

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**கண்காணிப்பாளர்.**